உ

சிவமயம்

திருவருள்மிகு ஸ்ரீசிவன் திருக்கோயில்

லாஷியம்

பஞ்சபுராணத் திரட்டு



தொகுப்பு - திரு. சபாபதி மகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ சரஸ்வதி தேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

இலண்டன் சிவன் கோயில்

லூஷியம்

பஞ்சபுராணத் திரட்டு

ஸ்ரீ நடராஜர்

தொகுப்பு - திரு. சபாபதி மகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்

	பக்கம்
முன்னுரை	3
ஆசியுரை	4
நால்வர் துதி	5
விநாயகர் துதி	6
விநாயகர் அகவல்	8
திருமுறை அர்ச்சனைப் பாடல்	10
சிவபுராணம்	13
பஞ்சபுராணம்	16-45
திருமால் துதி	46
திருமால் வழிபாடு (108 போற்றி)	49
விநாயகர் நாமாவளி	53
சிவன் நாமாவளி	54
சக்தி நாமாவளி	55
முருகன் நாமாவளி	55
ஹாரத்தி	56

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

சைவத்தின் மேற் சமயம் வேறில்லை, அதில்சார் சிவமாம்,
தெய்வத்தின் மேல் தெய்வம் இல்லெனும், நான்மறைச்செம்பொருள்
வாய்மை வைத்த, சீர்திருத் தேவாரமும், திருவாசகமும்
உய்வைத்தரச் செய்த, நால்வர் பொற்றாள், எம் உயிர்த்துணையே.

"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்னும் சிவபுராண அருள்மொழிக் கிணங்க திருமுறைகளைத் தொகுத்து வெளியீடு செய்கின்ற பெரியதோர் புண்ணியமான பணியை இறைவனது திருவருள் கைகூட்டி நடாத்தி வைத்துக் கொண்டிருக்கின்றது. இவ்வகையில் பஞ்சபுராணத்திரட்டு என்னும் சிறிய நூலைத் தொகுத்து வெளியீடு செய்ய வேண்டும் என்ற எமது விருப்பத்திற்கிணங்க இச்சிறிய நூலை அமைத்துள்ளோம். சைவ மக்கள் இதனை ஓதியும் உணர்ந்தும் பயன் பெற வேண்டும். இந்நூலின் பிற்பகுதியில் நாராயணனுக்குரிய பாடல்களும் சில சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் கூட்டுப்பிரார்த்தனைக்கு ஏற்ப நாமாவளி ஸ்தோத்திரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே அன்பர்கள் இந்நூலைப் பாராயணம் செய்து இறைவனை வணங்கி அருள்பெற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

இங்ஙனம்

திரு. சபாபதி மகேஸ்வரன்

பொறியியலாளர் (இலண்டன், ஓய்வு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியுரை

எமது சைவ சமயத்தின் கருவூலங்களால் போற்றப்படுகின்ற வேதாகமங்களும் திருமுறைகளும் இறைவனது இருகண்களாகப் புகழ்ந்து கூறப்படுகின்றன. இவை இரண்டிற்கும் காரணகர்த்தாவாக விளங்குபவன் இறைவனாவான். இவ்வகையில் யாழ்ப்பாணம் ஊரெழு கிராமத்தைச் சேர்ந்தவரும், இளைப்பாறிய பொறியியலாளரும், சமய சமூகத் தொண்டருமாகிய உயர்திரு. சபாபதி மகேஸ்வரன் அவர்கள் இறைவன் மீதும் சைவசமயத்தின் மீதும் மிகுந்தபக்தியுடையவர். திருமுறைகளின் சிறப்பை உணர்ந்து அவற்றை நூல் வடிவில் அமைத்து வெளியீடு செய்கின்ற சிவப்பணியில் இதுவரை பல நூல்களை வெளியீடு செய்துள்ளார். தற்போது பஞ்சபுராணத்திரட்டு என்கின்ற அரியதோர் நூல்களை வெளியீடு செய்கிறார். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகியவற்றை தொகுத்து ஒரு நூலாக வெளியீடு செய்வதையிட்டு நாம் பெரு மகிழ்ச்சியடைகிறோம். இந்நூல் எமக்கு மட்டுமன்றி எமது எதிர்கால சந்ததியினருக்கும் பெரும் பயனளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. எம் சைவ மக்கள் இந்நூலை நித்தியபாராயணத்திற்குரிய நூலாகப் பயன்படுத்தி இறையருள் பெறலாம். இந்நூலை வெளியீடு செய்கின்ற உயர்திரு சபாபதி மகேஸ்வரன் அவர்களுக்கு இறைவனது திருவருளினால் நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும், தீர்க்கமான ஆயுளும் கிடைக்கப்பெற்று மேலும் இதுபோன்ற சமய நூல்களை வெளியீடு செய்ய வேண்டும் என இலண்டன் லூயிஷம் சிவபுரம் பதியுறைகின்ற திருவருள்ஸ்ரீஅபீதகுஜாம்பாள் சமேத ஸ்ரீ அருணாசலேஸ்வரப் பெருமானது பாதார விந்தங்களைப் பணிந்து வணங்கி எமது மனப்பூர்வமாக நல்லாசிகளைக் கூறுகின்றோம்.

இங்ஙனம்

'சிவபிரதிஷ்டாஞானதிலகம்'

சிவஸ்ரீசபா. மகேஸ்வரக் குருக்கள் (BA) அவர்கள்

பிரதமசிவாச்சார்யார்

இலண்டன் ஸ்ரீசிவன் திருக்கோயில்

லூயிஷம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமபந்தர் அப்பர் சுந்தரர் மாணிக்கவாசகர்

நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலி யர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த பிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விநாயகர் துதி
திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து அடி போற்று கின்றேனே.

-திருமூலர்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

-ஞானசம்பந்தர்

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

-கபிலதேவ நாயனார்

வாக்குண்டாம், நல்லமனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

-ஔவையார்

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதினில் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

-கந்தபுராணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

-விருத்தாசலப்புராணம்

திகடசக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகடசக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

-கந்தபுராணம்

கணபதி யென்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி யென்றிடக் காலனுங் கைதொழும்
கணபதி யென்றிடக் கருமமாதலால்
கணபதி யென்றிடக் கவலை தீருமே.

சக்தியாய் சிவமாகி தனிப்பர
முக்தியான, முதலைத், துதிசெய்ய
சுத்தியாகிய, சொற்பொருள் எங்குமாய்
சித்தியானை தன் செய்ய பொற்பாதமே!

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண் (திருவருட்பயன்)

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினால் கண்ணில் பணிமின் கனிந்து.

என்னை நினைந்து அடிமை கொண்டு
என் இடர் களைத்து தன்னை நினையத் தருகின்றார்
முன்னை விரகுமரு சோலை வியன் நாரனும்
முக்கண் அரசு மகிழ் அத்தி முகத்தானே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் அருளியது

விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும், இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தான்எழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திரம்இது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்,
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்குங் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலம்ஒரு நான்கும் தந்தெனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனை கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற் கொன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறை அர்ச்சனைப் பாடல்கள்

திருநாவுக்கரசர் அருளியவை

சிவபிரானுக்குரிய 108 போற்றி

திருச்சிற்றம்பலம்

கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லும்கதியே போற்றி
அற்றவர்கட் காரமுதம் ஆனாய் போற்றி
அல்லல் அறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரம்எரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

வங்கமலி கடல் நஞ்சம் உண்டாய் போற்றி
மதயானை ஈருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல் புலித்தோல் ஆடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள் தம் இறைவா போற்றி
ஆலமர நீழல் அறம் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்நெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தி போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி
சிலையாலன்று எயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப்படையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி
மறிஏந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக்கு ஒருவனே போற்றி போற்றி
சென்னி மிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்ற போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலும் காணா
அனல் உருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான் பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரை கழலால் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புவர்க்கு அரும்பொருளே போற்றி போற்றி
நால் வேதம் ஆறங்கம் ஆனாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளை ஏறேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கை சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்கும் தேவே போற்றி
திருமாலுக்கு ஆழி அளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை ஆண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெம் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் பொற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

பிரமன்தன் சிரம்அரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோடு ஆணுருவாய் நின்றாய் போற்றி
கரம்நான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க்கு ஆற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க்கு அரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளும் தாளும்
சிரம்நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்

நினைவிற்கு: வடமொழியில் செய்யப்படும் அஷ்ட தோத்திரம் என்னும் 108 அர்ச்சனை போலவே தமிழில் நம்சமயாசாரியர் அருளிய இதனை அன்பர்கள் மனம் உருக ஓதிச்சிவபிரான் திருக்கோயில்களில் திருமூலட்டான நாதருக்கு அருச்சனை செய்விப்பது சிறப்பாகும். இப்பதிகம் நூற்றெட்டுப் போற்றிகளை உடையதாக இருப்பது கருதத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபுராணம்

மாணிக்கவாசகர் சுவாமிகள்
திருப்பெருந்துறையில் அருளியது.

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்
கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே
ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே
கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,
விலங்கு மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பஞ்சபுராணம் -1 (ஞாயிறு)

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார் புனற் செல்வமல்கு
சீர் கொள்செங்காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரம் காமுறவே.

திருவாசகம்

தந்தது உன்தன்னை, கொண்டது என்தன்னை
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றது ஒன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்
திருப்பெருந்துறை யுறை சிவனே
எந்தையே ஈசா உடல் இடம் கொண்டாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே.

திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு, பறந்து, அயன் தேட
அங்ஙனே, பெரிய நீ சிறிய
என்னையாள் விரும்பி, என்மனம் புகுந்த
எளிமையை, என்றும், நான் மறக்கேன்
முன்னம் மால் அறியா, ஒருவனாம் இருவா
முக்கணா, நாற்பெருந் தடந் தோள்
கன்னலே தேனே, அமுதமே.
கங்கை கொண்ட, சோளேச்சரத்தானே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பல்லாண்டு

குழல் ஒலி யாழ் ஒலி, கூத்தொலி
ஏத்தொலி, எங்கும் குழாம் பெருகி,
விழ வொலி விண்ணளவும், சென்று
விம்மி மிகு, திருவாரூரின்
மழவிடையார்க்கு வழி வழியாளாய்
மணம் செய் குடிப்பிறந்த
பழ அடியா ரொடும், கூடி எம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

திருச்சிற்றம்பலம்

****

அபிராமி அந்தாதி

உதிக்கின்ற செங்கதிர், உச்சித்திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்குமத்தோய மென்ன
விதிக்கின்ற மேனி, அபிராமி, எந்தன் விழுத்துணையே.

திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடு மடியவர் புத்தியில் உறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன் மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சபுராணம்–2 திங்கள்

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மெய்யனை, மெய்யின் நின்றுணர் வானை,
மெய்யில்லாதவர், தங்களுக்கெல்லாம்
பொய்யனைப், புரம் மூன்றெரித்தானைப்,
புனிதனைப், புலித்தோலுடையானைச்,
செய்யனை, வெளியதிரு நீற்றில்
திகழு மேனியன் மான்மறி ஏந்தும்
மைகொள் கண்டனை, வாழ்கொளி புத்தூர்
மாணிக்கத்தை, மறந்தென் நினைக்கேனே.

திருவாசகம்

முத்தனே! முதல்வா! முக்கணா!முனிவா!
மொட்டறா மலர் பறித்து, இறைஞ்சி
பத்தியாய் நினைந்து, பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்து, அருள் செய்யும்
சித்தனே! செல்வத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்
அத்தனே! அடியேன் ஆதரித்து அழைத்தால்
"அதெந்துவே" என்று அருளாயே!

திருவிசைப்பா

நீறணி பவளக்குன்றமே! நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடை எம் அற்புதக் கூத்தா
அம்பொன் செய் அம்பலத்தரசே!
ஏறணி கொடி, எம் ஈசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம்பத்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமைகோன்
அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்

அண்ணலே எனை ஆண்டு கொண்டருளிய அமுதே!
விண்ணிலே மறைந்தருள் புரி வேதநாயகனே!
கண்ணினால் திருக்கயிலையில் இருந்த நின் கோலம்
நண்ணி நான் தொழ, நயந்து அருள்புரியெனப் பணிந்தார்.

திருச்சிற்றம்பலம்

****

அபிராமி அந்தாதி

சித்தியும். சித்தி தரும் தெய்வமாகித் திகழும் பரா
சத்தியும், சத்தி தழைக்கும் சிவமும் , தவம் முயல்வார்
முத்தியும். முத்திக்கு வித்தும், வித்தாகி முளைத்து எழுந்த
புத்தியும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தை அன்றே.

திருப்புகழ்

நீதான் எத்தனை யானும் நீடுழிக் கிருபையாகி
மாதானத் தனமாக, மாஞானக் கழல் தாராய்
வேதா மைத்துண வேளே, வீரா சற்குணசீலா
ஆதாரத் தொளியானே, ஆரூரிற் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பஞ்சபுராணம் ~ 3 செவ்வாய்

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவ
பொங்கழல் உருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே.

திருவாசகம்

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே.

திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான் முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்

எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும்
உண்மையாவது பூசனை எனவுரைத்தருள
அண்ணலார் தமை அருச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணின் நல்லவளாயின பெருந்தவக் கொழுந்து.

திருச்சிற்றம்பலம்

****

அபிராமி அந்தாதி

சுந்தரி எந்தை துணைவி, என் பாசத் தொடரை எல்லாம்
வந்தரி, சிந்துர வண்ணத்தினாள், மகிடன் தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத கன்னிகை, ஆரணத்தோன்
கந்தரி கைத்தலத்தாள், மலர்த்தாள் என் கருத்தனவே.

திருப்புகழ்

அகரமுமாகி அதிபனுமாகி அதிகமுமாகி அகமாகி
அயனெனவாகி அரியெனவாகி அரெனெனவாகி அவர்மேலாய்
இகரமுமாகி எவைகளுமாகி இனிமையுமாகி வருவோனே
இரு நிலமீதில் எளியனும் வாழ எனதுமுன் ஓடி வரவேணும்
மகபதியாகி மருவும் வலாரி மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறைவேடன் அருளியபூசை மகிழ் கதிர்காமம் உடையோனே
செகணசேகு தகுதிமிதோதி திமியென ஆடு மயிலோனே
திருமலிவான பழமுதிர்சோலை மலைமிசை மேவும் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பஞ்சபுராணம்~ 4 புதன்

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மண்பொருந்தி வாழ்பவற்கும், மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும், வீடுபேறாய் நின்றானை
பண்பொருந்த இசைபாடும், பழனம் சேர், அப்பனை
என் கண்பொருந்தும், போதத்தும், கைவிட நான் கடவேனோ

திருவாசகம்

அப்பனே எனக்கு அமுதனே
ஆனந்தனே, அகம்நெக, அள்ளூறுதேன்
ஒப்பனே, உனக்கு உரிய அன்பரின்
உரியனாய், உன்னைப்பருக நின்றதோர்
துப்பனே! சுடர் முடியனே! துணையாளனே!
தொழும்பாளர், எய்ப்பினில்.
வைப்பனே! எனை வைப்பதோ சொலாய்
நைய வையகத்து எங்கள், மன்னனே!

திருவிசைப்பா

ஏக நாயகனை இமையவர்க்கு அரசை
என்னுயிர்க்கு அமுதினை, எதிரில்
போக நாயகனைப், புயல் வணற்கு அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா, ஊர்ந்த
மேக நாயகனை, மிகுதிருவீழி மிழலை
விண்ணிழி செழுங்கோயில்,
யோக நாயகனை அன்றி, மற்றொன்றும்
உண்டென, உணர்கிலேன் யானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு இவ்
அண்டத் தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டற்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்தன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம்
இன்பம் ஆம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரிய
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம் பாடினார்
பரவினார் பணிந்தார்.

திருச்சிற்றம்பலம்

****

அபிராமி அந்தாதி

சொல்லும் பொருளும் எனநடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே, நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்,
செல்லும் தவ நெறியும், சிவலோகமும் சித்திக்குமே.

திருப்புகழ்

பாதிமதி நதி, போதுமணிசடை
நாதன் அருளிய — குமரேசா
பாகுகனி மொழி, மாதுகுறமகள்,
பாதம் வருடிய — மணவாளா
காது மொரு விழி, காகமுற அருள்
மாய னரிதிரு — மருகோனே
காலன் எனை அணு, காமல் உனதிரு
காலில் வழிபட — அருள்வாயே
ஆதி அயனொடு, தேவர் சுரர், உலகு
ஆளும் வகையுறு — சிறைமீளா
ஆடு மயிலினி, லேறிஅமரர்கள்
சூழ வரவரும் — இளையோனே
சூத மிகவளர் சோலை மருவு
சுவாமி மலைதனில் — உறைவோனே
சூரன் உடல், அற வாரி சுவரிட
வேலை விட வல — பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

பஞ்சபுராணம் ~ 5 வியாழன்

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற் சோதீ மிக்க
உருவேயென் உறவே யென் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமரர் ஏறே.

திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்
விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சய சய
போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே

திருவிசைப்பா

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரள்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்

ஆதியாய் நடுவுமாகி, அளவிலா அளவுமாகி
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம் போற்றி! போற்றி!

திருச்சிற்றம்பலம்

****

அபிராமி அந்தாதி

ஒன்றாய் அரும்பி, பலவாய் விரிந்து, இவ்வுலகு எங்குமாய்
நின்றாள், அனைத்தையும் நீங்கி நிற்பாள் எந்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா, இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என் ஐயனுமே.

திருப்புகழ்

காலனிடத் தணுகாதே, காசினியில் பிறவாதே
சீல அகத்திய ஞானத் தேனமுதைத் தருவாயே
மாலயனுக்கு அரியானே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே நாககிரிப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

பஞ்சபுராணம் ~ 6 வெள்ளி

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

கருவுற்ற நாள்முதலாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென், உள்ளமும், நானும் கிடந்தலந்தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா! திருவாலவாயா!திருவாரூரா!
ஒரு பற்றிலாமையும் கண்டிரங்காய், கச்சியேகம்பனே.

திருவாசகம்

அன்றேயென்தன், ஆவியும்
உடலும், உடைமையெல்லாமும்
குன்றே யனையாய், எனைஆட்
கொண்ட போதே, கொண்டிலையோ
இன்றோர், இடையூ றெனக்குண்டோ,
எண்தோள் முக்கண் எம்மானே,
நன்றே செய்வாய், பிழை செய்வாய்,
நானோ இதற்கு நாயகமே.

திருவிசைப்பா

முத்தீயாளர் நான்மறையர் மூவாயிரவர் நின்னோடு
ஒத்தே வாழும் தன்மையாளர் ஓதிய நான்மறையைத்
தெத்தே என்று, வண்டுபாடும் தென்தில்லை அம்பலத்துள்
அத்தா உன்தன் ஆடல் காண அணைவதும் என்று கொலோ.

திருப்பல்லாண்டு

நிட்டையி லாவுடல் நீத்தென்னை ஆண்ட நிகரிலா வணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச் சீராட்டும் திறங்களுமே சிந்தித்து
அட்ட மூர்த்திக்கென் அகநெக ஊறும் அமிர்தினுக்(கு) ஆலநிழற்
பட்டனுக்(கு) என்னைத் தன் பாற்படுத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற் புகலி திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

திருச்சிற்றம்பலம்

****

அபிராமி அந்தாதி

பூத்தவளே, புவனம் பதினான்கையும் பூத்த வண்ணம்
காத்தவளே, பின் கரந்தவளே, கறைக் கண்டனுக்கு
மூத்தவளே, என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே, உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே.

திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமாதான சற்குண நேயா
ஒப்பிலா மாமணிக்கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

பஞ்சபுராணம்–7 சனி

தோவரம்

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை உமையா ளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலை முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவாவண்ணம் அறுமே.

திருவாசகம்

விண்ணாளும் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானை
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பொருந்துறையிற்
கண்ணார் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

திருவிசைப்பா

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
பருகுதோ(று) அமுதம் ஒத்தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள் இவர்தம்
திருவுரு இருந்தவா பாரீர்
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமாய் அதற்(ற)கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி விடங்கராய்
நடம் குலாவினரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட்டு ஓலமிட்டு இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்ப என் னுயிராண்ட கோவினுக்(கு) என்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பக னாகிக் கரையில் கருணைக் கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

பெரிய புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலம் நீடி யருமறை சிரத்தின் மேலாம்
சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடம் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

****

அபிராமி அந்தாதி

பின்னே திரிந்து, உன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதல் மூவருக்கும்
அன்னே, உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே
என்னே? இனி உன்னை யான், மறவாமல் நின்று ஏத்துவனே.

திருப்புகழ்

இயலிசையில் உசித வஞ்சிக் கயர்வாகி
இரவு பகல் மனது சிந்தித் துழலாதே
உயர் கருணை புரியும் இன்பக் கடல்மூழ்கி
உனையெனதுள் அறியும் அன்பைத் தருவாயே
மயில் தகர்கல் இடையர் அந்தத் தினைகாவல்
வனசகுற மகளை வந்தித் தணைவோனே
கயிலைமலை அணைய செந்திற் பதிவாழ்வே
கரிமுகவன் இளைய கந்தப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சபுராணம்~ 8

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பேராயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானை பிரிவிலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப்பானை
மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகி
தீரா நோய் தீர்த்தருள வல்லான் தன்னை
திரிபுரங்கள் தீ எழத் திண்சிலை கைக் கொண்ட
போரானை புள்ளிருக்கு வேளூரானை
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே.

திருவாசகம்

உருத்தெரியாக்காலத்தே உள்புகுந் தென் உளம் மன்னி
கருத்திருத்தி, ஊன்புக்கு, கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானை தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன் அணிகொள் தில்லை கண்டேனே.

திருவிசைப்பா

தன்னடி நிழற்கீழ் என்னையும் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
எண்ணிடைக் கமலம் மூன்றினுள் தோன்றி
எழும் செழுஞ்சுடரினை, அருள்சேர்
மின் நெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்கும் வெண்பளிங்கின்
பொன்னடிக் கடிமை புக்கினிப்போக
விடுவனோ பூண்டு கொண்டேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையும் சிலதேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண் மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதம் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலை ஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.

திருச்சிற்றம்பலம்

****

அபிராமியந்தாதி

தனம் தரும், கல்வி தரும், ஒருநாளும் தளர்வு அறியா
மனம் தரும், தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம் தரும், நல்லன எல்லாம் தரும், அன்பர் என்பவர்க்கே
கனம் தரும் பூங்குழலாள், அபிராமி கடைக் கண்களே.

திருப்புகழ்

அதிருங் கழல் பணிந்து அடியேனுன்
அபயம் புகுவ தென்று நிலைகாண
இதயந் தனிலி ருந்து க்ருபையாகி
இடர் சங்கைகள் கலங்க அருள்வாயே
ஏதிரங் கொருவ ரின்றி நடமாடும்
இறைவன் தனது பங்கி லுமைபாலா
பதியெங் கிலுமி ருந்து விளையாடிப்
பலகுன் றிலும் அமர்ந்த பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பஞ்சபுராணம் ~9

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னை, என் பிழையைப் பொறுப்பானைப்
பிழையெலாம் தவிரப் பணிப்பானை
இன்னதன் மையன் என்றறி யொண்ணா
எம்மானை, எளிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற் பழனத் தணி
ஆரூரானை மறக்கலுமாமே!

திருவாசகம்

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்து
என் மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந்துறை யுறை சிவனே
இறைவனே நீ என் உடல் இடம் கொண்டாய்
இனி உன்னை என் இரக்கேனே

திருவிசைப்பா

பவள மால் வரையைப் பனி படர்ந்தனைய தோர்
படரொளி தரு திரு நீறும்
குவளை மாமலர்க் கண்ணியும் கொன்றையும் துன்று
பொற்குழல் திருச் சடையும்
திவள மாளிகை சூழ் தரு தில்லையுள்
திரு நடம் புரிகின்ற
தவள வண்ணனை நினை தொறும் என்மனம்
தழல் மெழுகு ஒக்கின்றதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பெரிய புராணம்

தண்ணளி வெண் குடை வேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழை பொழிந்தார் வானவர் பூமழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்கள் தொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான்.

திருச்சிற்றம்பலம்

****

அபிராமி அந்தாதி

நாயகி, நான்முகி, நாராயணி, கை நளின பஞ்ச
சாயகி, சாம்பவி, சங்கரி, சாமளை, சாதி நச்சு
வாய் அகி மாலினி, வாராகி, சூலினி, மாதங்கி என்று
ஆய கியாதி உடையாள் சரண் அரண் நமக்கே.

திருப்புகழ்

வசனமிக வேற்றி மறவாதே
மனது துயர் ஆற்றில் உழலாதே
இசை பயில் சடாச்சரம் அதாலே
இகபர சௌபாக்யம் அருள்வாயே
பதிபசு சிவாக்யம் உணர்வோனே
பழனி மலை வீற்று அருளும் வேலா
அசுரர் கிளைவாட்டி மிகவாழ
அமரர் சிறை மீட்ட பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சபுராணம் –10

தேவாரம்

வள்ளி முலைதோய் குமரன் தாதை: வான் தோயும்
வெள்ளி மலைபோல் விடையொன்று உடையான் மேவுமூர்:
தெள்ளி வருநீர் அரிசில் தென்பால், சிறை வண்டும்
புள்ளும் மலியூம் பொய்கை சூழ்ந்த புத்தூரே

திருவாசகம்

சுந்தர நீறணிந்தும் மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி, யெங்கும்
எழில் சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன் (அ)யன் தன்பெருமான்
ஆழியான் நாதன், **நல்வேலன்** தாதை
எந்தரம் ஆளுமை யான் கொழுநற்கு
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்தும் நாமே.

திருவிசைப்பா

திருமகன் முருகன் தேவியேல் உமையாள்
திருமகள் மருமகன் தாயாம்
மருமகன் மதனன் மாமனேல் இமவான்
மலையுடை யரையர்தம்பாவை
தருமலி வளனாஞ்சிவபுரன் தோழன்
தனபதி சாட்டியக் குடியார்
இருமுகங் கழல்மூன் றேழுகைத் தலமேழ்
இருக்கையி லிருந்தஈ சனுக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பல்லாண்டு

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்

செய்யமேனிக் கருங்குஞ்சிச் செழுங்கஞ்சுகத்துப் பயிரவர் யாம
உய்யஅமுது செய்யாதே ஒளித்த தெங்கே எனத்தேடி
மையல் கொண்டு புறத்தணைய, மறைந்த அவர் தாம், மலைபயந்த
தையலோடும், சரவணத்துத் தனயரோடும் தாம் அணைவர்

திருச்சிற்றம்பலம்

****

அபிராமி அந்தாதி

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள், பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமளயாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்ற நெஞ்சே! இரங்கேல்! உனக்கு என்குறையே!

திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனே
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

Digitized by Arunachalam Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சபுராணம்~11

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை எண்ணுங்கால்
ஓத்தூர் மேய ஒளிமழு வாளங்கைக்
கூத்தீரும்ம குணங்களே.

திருவாசகம்

கண்கள் இரண்டும் அவன் கழல்
கண்டு களிப்பன ஆகாதே
காரிகையார்கள் தம் வாழ்வில்
என் வாழ்வு கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடும் ஆறு
மறந்திடும் ஆகாதே
மால் அறியா மலர்ப் பாதம்
இரண்டும் வணங்குதும் ஆகாதே
பண் களி கூர் தரு பாடலோ
டாடல் பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன் நாடுடையான் படை
ஆட்சிகள் பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம்
வந்து வெளிப்படும் ஆகாதே
மீன் வலை வீசிய கானவன்
வந்து வெளிப்படும் ஆயிடிலே.

திருவிசைப்பா

இடர் கெடுத்(து) என்னை ஆண்டு கொண்டு என்னுள்
இருட்பிழம்பு அறஎறிந்து எழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுள் சோதி!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறியாமைப்
படரொளிப் பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச், சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன், பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகுங் கழற உழறி, உமைமண வாளனுக்காட்,
பாரும் விசும்பும், அறியும் பரிசுநாம், பல்லாண்டு கூறுதுமே

பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும், இன்னும் வேண்டும், நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும் போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்.

திருச்சிற்றம்பலம்

****

காமாட்சி அம்மன் விருத்தம்

சுந்தரி சவுந்தரி, துரந்தரி, நிரந்தரி
ஜோதியாய் நின்ற உமையே
சுக்கிர வாரத்தில் உனைக்கண்டு தரிசித்தவர்கள்
துன்பத்தை நீக்கிடுவாய்
சிந்தை தனில் உன்பாதம் தன்னையே தொழுபவர்
துயரத்தை மாற்றிடுவாய்
ஜெகமெலாம் உன் மாயை புகழை எண்ணலாமோ
சிறியனால் முடிந்திடாது
சொந்த உன் மைந்தனாம், எந்தனை இரட்சிக்க
சிறிய கடன் உனது அம்மா!
சிவசிவ மகேஸ்வரி, பரமனிட ஈஸ்வரி,
சிரோன்மணி, மனோன்மணியும் நீ!
அந்தரி, துரந்தரி, நிரந்தரி, பரம்பரி
அனாத ரட்சகியும் நீயே
அழகான காஞ்சியில், புகழாக வாழ்ந்திடும்
அம்மை, காமாட்சி உமையே!

திருப்புகழ்

வேத வெற்பிலே புனத்தில், மேவி நிற்கும் அபிராமா
வேடு வச்சி பாத பத்ம மீதுசெச்சை முடிதோய
ஆதரித்து வேளை புக்க, ஆரிரட்டி புயநேய
ஆதரத்தோடாதரிக்க, ஆன புத்தி புகல்வாயே
காது முகர வீர பத்ர, காளி வெட்க மகுடாமா
காசமுட்ட வீசிவிட்ட, காலர் பத்தி இமையோரை
ஓது வித்த நாதர் கற்க, ஓது வித்த முனிநாண
ஓரெழுத்தில் ஆரெழுத்தை ஓதுவித்த பெருமாளே.

Digitized by Thiruvasagam.org
noolaham.org | aavanaham.org

பஞ்சபுராணம் ~ 12

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டு மெய் ஆய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடலரே தொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேய நம்பானே.

திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம் பரனே
பற்று நான் மற்று இலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்து அரசே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
யாரொடு நோகேன்? ஆர்க்கு எடுத்து உரைக்கேன்?
ஆண்ட நீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக! என்று அருள் புரியாயே!

திருவிசைப்பா

ஆடர(வு) ஆடஆடும் அம்பலத்து அமிர்தே என்னும்
சேடர்சே வடிகள் சூடத் திருவிலா உருவினாரைச்
சாடரைச் சாட்கை மோடச் சழக்கரைப் பிழக்கப் பிட்கப்
பேடரைக் காணா கண்வாய் பேசா(து) அப் பேய்க ளோடே.

திருப்பல்லாண்டு

சேலும் கயலுந் திளைக்குங்
கண்ணார், இளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும், பொடியணி மார்பிலங்
குமென்று, புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா,
நெறிதந்து, வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
றானுக்கே, பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய புராணம்

ஞானத்தின் திருவுருவை நான் மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையின்றி, மண்ணில் வளர் மதிக்கொழுந்தை
தேனக்க மலர்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுத்குங்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

திருச்சிற்றம்பலம்

****

அபிராமி அம்மைப் பதிகம்

சகல செல்வங்களும் தரும் இமய கிரிராச
தனயை மாதேவி நின்னைச்
சத்யமாய் நித்யமுள்ளத்தில் துதிக்கும் உத்
தமருக்(கு)இரங்கி, மிகவும்
அகிலமதில், நோயின்மை கல்விதன தானியம்
அழகுபுகழ்பெருமை இளமை
அறிவு சந்தானம் வலி துணிவு வாழ்நாள் வெற்றி
ஆகு நல் ஊழ் நுகர்ச்சி
தொகை தரும் பதினாறு பேறும் தந்தருளி நீ
சுகானந்த வாழ்வளிப்பாய்
சுகிர்தகுணசாலி! பரிபாலி! அநுகூலி!திரி
சூலி! மங்கள விசாலி!
மகவுநான், நீ தாய் அளிக்கொணாதோ? மகிமை
வளர் திருக்கடவூரில் வாழ்
வாமி! சுபநேமி! புகழ்நாமி! சிவசாமி மகிழ்
வாமி! அபிராமி! உமையே!

திருப்புகழ்

நிறைமதி முகமெனு மொளியாலே
நெறிவிழி கணையெனு நிகராலே
உறவுகொள் மடவர்கள் உறவாமோ
உனதிருவடியினி அருள்வாயே
மறைபயில் அரிதிரு மருகோனே
மருவலர் அசுரர்கள் குலகாலா
குறமகள் தனை மணம் அருள்வோனே
குருமலை மருவிய பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சபுராணம் ~ 13

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தான் அதறிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ, நாயி னேனைப் பொருட்படுத்து,
வானெனை வந்தெதிர் கொள்ள, மத்தயானை, அருள் புரிந்து
ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான் மலை, உத்தமனே.

திருவாசகம்

பெரும் பெருமான் என் பிறவியை
வேர் அறுத்துப் பெரும் பிச்சுத்
தரும் பெருமான், சதுரப் பெருமான்
என் மனத்தினுள்ளே
வரும் பெருமான், மலரோன், நெடுமால்,
அறியாமல் நின்ற
அரும்பெருமான், உடையாய்!
அடியேன் உன் அடைக்கலமே!

திருவிசைப்பா

தற்பரம் பொருளே! சசிகண்ட! சிகண்டா!
சாமகண்டா! அண்ட வாணா!
நற்பெரும் பொருளாய் உரைகலந்து உன்னை
என்னுடை நாவினால் நவில்வான்
அற்பன் என் உள்ளத்து அளவிலா உன்னைத்
தந்த பொன் அம்பலத்தரசே!
கற்பமாய் உலகாய் அல்லையா னாயைத்
தொண்டனேன் கருதுமா கருதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பல்லாண்டு

எந்தை என்தாய், சுற்றம் முற்றும்,
எமக்கு அமுதாம் எம்பிரான் என்றென்று,
சிந்தை செய்யும் சிவன்
சீரடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப் புகுந்தாண்டு கொண்டு ஆருயிர் மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்.

திருச்சிற்றம்பலம்

****

அபிராமி அந்தாதி

மணியே, மணியின் ஒளியே. ஒளிரும் மணி புனைந்த
அணியே, அணியும் அணிக்கு அழகே, அணுகாதவர்க்கு
பிணியே, பிணிக்கு மருந்தே, அமரர் பெரு விருந்தே
பணியேன் ஒருவரை, நின் பத்ம பாதம் பணிந்த பின்னே.

திருப்புகழ்

கலைமேவு ஞானப் பிரகாச
கடலாடி ஆசைக் கடலேறி
பலமாய வாதில் பிறழாதே
பதி ஞான வாழ்வைத் தருவாயே
மலைமேவு மாயக் குறமாதின்
மணமேவு வாலக் குமரேசா
சிலை வேட சேவல் கொடியோனே
திருவாணி கூடல் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பஞ்சபுராணம் ~ 14

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்னம் நீ புரி நல்வினை பயனிடை முழுமணி தரளங்கள்
மன்னு காவிரி, சூழ்திரு வலம்சுழி, வாணனை வாயார
பன்னி ஆதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே.

திருவாசகம்

அன்பினால் அடியேன் ஆவியோடு, ஆக்கை
ஆனந்தமாய்க் கசிந்து உருக,
என்பரம் அல்லா இன் அருள் தந்தாய்
யான் இதற்கிலனோர் கைம்மாறு,
முன்புமாய் பின்பும், முழுதுமாய்ப் பரந்த
முத்தனே! முடிவிலா முதலே!
தென்பெருந்துறையாய்! சிவபெருமானே!
சீர் உடைச் சிவபுரத்து அரசே!

திருவிசைப்பா

கடியார் கணம் புல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமர் உலகம் ஆள நீ ஆளாதே
முடியா முத் தீவேள்வி மூவாயிரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டு நீ குலாவிக் கூத்தாடினையே.

திருப்பல்லாண்டு

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குந்திசை திசையான
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாங்குழா மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதை என் ஆர்வத்
தனத்தினை அப்பனை ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியபுராணம்

சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர் காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்தருளப் பெற்ற பெரிதனால்
எற்றைக்கும் திருவருள் உடையேம்
நன்றியின், நெறியில், அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும், உய்ந்து
வென்றி கொள், திருநீற்றின் ஒளியினில், விளங்கும்
மேன்மையும் படைத்தனன் என்பார்.

திருச்சிற்றம்பலம்

****

அபிராமி அம்மைப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே.

திருப்புகழ்

அயிலொத் தெழு மிரு விழியாலே
அமுதொத் திடுமரு மொழியாலே
சயிலத் தெழு துணை முலையாலே
தடையுற் றடியனு மடிவேனோ
கயிலைப் பதியரன் முருகோனே
கடலக் கரை திரை யருகேசூழ்
மயிலைப் பதிதனி லுறைவோனே
மகிமைக் கடியவர் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

பஞ்சபுராணம் ~ 15

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

ஒன்றா வுலகனைத்தும் ஆனார் தாமே
ஊழிதோ றூழி உயர்ந்தார் தாமே
நின்றாகி எங்கும் நிமிர்ந்தார் தாமே
நீர் வளி தீ ஆகாசம் ஆனார் தாமே
கொன்றாடும் கூற்றை உதைத்தார் தாமே
கோலப் பழனை உடையார் தாமே
சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே
திரு ஆலங் காடுறையும் செல்வர் தாமே.

திருவாசகம்

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டு உன் திருவார்த்தை
விரிப்பார், கேட்பார், மெச்சுவார்,
வெவ்வேறு இருந்துன், திருநாமம்
தரிப்பார், பொன்னம் பலத்து ஆடும்
தலைவா என்பார், அவர்முன்னே
நரிப்பாய், நாயேன் இருப்பேனோ
நம்பி, இனித்தான் நல்காயே.

திருவிசைப்பா

தனத நற் தோழா சங்கரா சூலபாணியே
தாணுவே சிவனே
கனக நற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்றுடைய தோர் கரும்பே
அனகனே குமர விநாயக ஜனக
அம்பலத்து அமரர் சேகரனே
உனகழல் இணை யென் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பல்லாண்டு

மிண்டுமனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்கு
ஆட்செய்மின், குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள், அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றுமுள்ள பொருளென்றே,
பல்லாண்டு கூறுதுமே.

பெரியபுராணம்

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான் புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

திருச்சிற்றம்பலம்

****

அபிராமி அந்தாதி

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத்தாள், பனிமாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க
இழவுற்று நின்ற நெஞ்சே, இரங்கேல், உனக்கு என்குறையே.

திருப்புகழ்

மதியால் வித்தகனாகி
மனதால் உத்தமனாகி
பதிவாகிச் சிவஞான
பரயோகத் தருள்வாயே
நிதியே நித்தியமே என்
நினைவே நற்பொருளாயோய்
கதியே சொற்பரவேளே
கருவூரிற் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமால் துதி

பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு
பல்கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண் ணாஉன்
செவ்வடி செவ்வி திருக்காப்பு

அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறை யும்சுட ராழியும் பல்லாண்டு
படைபோர் புக்குமுழங்கும் அப் பாஞ்சகன் னியமும் பல்லாண்டே.
-பெரியாழ்வார் திருமொழி-

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீ ராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுத்தத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.
-ஆண்டாள்-

அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா – நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.
-பூதத்தாழ்வார்

ஒன்றும் மறந்தறியேன் ஓதநீர் வண்ணனை
இன்று மறப்பனோ ஏழைகாள் - அன்று
கருவரங்கத் துள்கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்க மேயான் திசை.
-பொய்கை யாழ்வார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைகண்டேன்
என்னாழி வண்ணன் பால் இன்று.

-பேயாழ்வார்-

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும் பருளும், அருளோடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான்கண்டு கண்டேன் நாராயணா வென்னும் நாமம்.

-திருமங்கை ஆழ்வார்

அத்தனாகி அன்னையாகி ஆளும்எம்பி ரானுமாய்
ஒத்தொவ்வாத பல்பிறப் பொழித்து நம்மை ஆட்கொள்வான்
முத்தனார் முகந்தனார் புகுந்து நம்முள் மேவினார்
எத்தினால் இடர்கடல் கிடத்தியேழை நெஞ்சமே.

-திருமழிசை ஆழ்வார்-

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணை
உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோனனி அரங்கன் என் அமுதினை
கண்ட கண்கள்மற் றொன்றினைக் காணாவே.

-திருப்பாணாழ்வார்-

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின் கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்து உன் பவள வாய் காண்பேனே.

-பெருமாள் திருமொழி-

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

-தொண்டரடிப் பொடியாழ்வார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளன் கண்டாய் நன்னெஞ்சே உத்தமென்றும்
உளன் கண்டாய் உள்ளுவாருள்ளத்து – உளன் கண்டாய்
வெள்ளத் தினுள்ளானும் வேங்கடத்து மேயானும்
உள்ளத்தி னுள்ளா னென்று ஓர்.

-பொய்கையாழ்வார்-

துப்புடையாரை அடைவதெல்லாம் சோர்விடத்துத்
துணையாவர் என்றே
ஓப்பிலேன் ஆகிலும் நின்னடைந்தேன்
யானைக்கு நீ அருள்செய்தமையால்
எய்ப்பு என்னை வந்து நலியும்போது அங்கேதும்
நான் உன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்
அரங்கத்தரவணைப் பள்ளியானே.

வான்கொண்டு கிளர்ந் தெழுந்த முகில்காள், வேங்கடத்துத்
தேன்கொண்ட மவர்சிதறத் திரண்டேறிப் பொழிவார்கள்,
ஊன் கொண்ட வள்ளுகிரா லிரணியனை யுடலிடந்தான்
தான் கொண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே.

உயர்வற உயர்நலம் உடையவன் எவன்? அவன்
மயர்வற மதிநலம் அருளினன் எவன்? அவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி எவன்? அவன்
துயரறு சுடரடி தொழுது எழு என் மனனே

-நம்மாழ்வார்-

பிறவித்துயர் அற ஞானத்துள் நின்று
துறவிச்சுடர் விளக் கம்தலைப் பெய்வர்
அறவனை ஆழிப் படைஅந் தணனை
மறவியை இன்றி மனத்து வைப்பாரே.

-நம்மாழ்வார்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

திருமால் வழிபாடு 108 போற்றி

ஸ்ரீமன் நாராயணப் பெருமான் திருவடி போற்றி

அறிவினுக்கு அறிவாம் அரியே போற்றி
செறிதுழாய்க் கண்ணத் திருமால் போற்றி
மா திருமகள் சார் மார்பா போற்றி
ஆதியும் அந்தமும் அற்றாய் போற்றி
உயிரை உடலாய் உற்றாய் போற்றி

உயிர்க்குள் உயிராய் போற்றி
மஞ்சின் வண்ண மாலே போற்றி
அஞ்சல் என்று அடியார்க் கருள்வாய் போற்றி
உலகின் உட்செறி வயிற்றோய்ப் போற்றி
நலமுடன் உலகினை நல்கினாய் போற்றி

ஊனமில் சக்கரம் உடையாய் போற்றி
பானிறச் சங்கார் பண்ணவ போற்றி
எழுவில் தண்டினை ஏந்தினாய் போற்றி
வழுவிலா வாள்கொள் மாதவ போற்றிழி
ஏழுலகுந் தொழும் எந்தாய் போற்றி

ஆழ்கடல் அறிதுயில் அமர்ந்தாய் போற்றி
ஐயரா அணையுடை அமலா போற்றி
மையலை எமக்கு மாற்றுக போற்றி
அகமொழித் தவரை ஆள்வாய் போற்றி
இகபரம் இரண்டும் ஈவோய் போற்றி

பொய்யருக் கரிய பொருளே போற்றி
மெய்யருக் கெளிய மேலோய் போற்றி
ஓப்பில் தாமரை உந்தியோய் போற்றி
இப்புவி தோன்ற எண்ணினாய் போற்றி
கரியின் துயரைக் கழித்தாய் போற்றி

பெரிய முதலையைப் பிளந்தோய் போற்றி
ஆயர் மகளிர்க்கு அன்பா போற்றி
மாயம் புரியும் மாதவ போற்றி
அன்பரின் வெண்ணெய்க் காவலாய் போற்றி
பன் கவுரவர்க்குப் பகைவா போற்றி

Digitized by Siva Siva Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணம் அடைந்தோர் சார்வே போற்றி
அரணம் அவர்க்கிங் காவாய் போற்றி
திருமகள் உரைசெவி சேர்ப்பாய் போற்றி
அருளவல் அன்பர்க்கு அளிப்பாய் போற்றி
நீரினில் மீனாய் நீந்தினாய் போற்றி

பாரினில் ஆமையாய் படிந்தாய் போற்றி
குறளாய் நிலத்தைக் கொண்டாய் போற்றி
திறமுடன் வளர்ந்த செம்மால் போற்றி
ஈரடி ஈருல கிட்டனை போற்றி
ஓரடி மாபலிக் குதவினை போற்றி

பன்றியாய்ப் பூமி பறித்தாய் போற்றி
வில்லுடை ராமா வீரா போற்றி
வல்லன் பரசு ராமா போற்றி
மழுப்பல ராமன் மாண்பது போற்றி
தொழுமென் கண்ணன் தூயவன் போற்றி

அவனியற் கற்கி ஆவாய் போற்றி
இவண் நீ பல்பிறப் பெடுத்தாய் போற்றி
அரிவைக் காடை அளித்தாய் போற்றி
கரியை வேள்வியில் காய்ந்தாய் போற்றி
கஞ்சனைக் காலால் கடிநதோய் போற்றி

வஞ்சப் பூதகி வதைத்தாய் போற்றி
ஐவர் அன்பில் ஆழ்ந்தாய் போற்றி
அவர் என் உயிரென்று அறைந்தோய் போற்றி
ஆண்டாள் மாலையை அணிந்தாய் போற்றி
பாண்டவர் நட்பைப் பற்றினாய் போற்றி

அழகுறு பார்த்தன் அடுத்தோய் போற்றி
கழறிக் கீதையைக் காத்தாய் போற்றி
மலையால் மழையை மறித்தோய் போற்றி
கலைகள் பலவும் கற்றோய் போற்றி
சிலையைப் பெண்ணாய் செய்தோய் போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைசெய் தாடகை கொன்றோய் போற்றி
அரக்கர் பலரை அழித்தோய் போற்றி
முப்பெரும் படையினைக் கொண்டோய் போற்றி
கடலை அடைத்த கடவுள் போற்றி
உடலைச் சபரிக் கொழித்தாய் போற்றி

துதிப்போர் வினைத்தொடர் தொலைப்போய் போற்றி
கதியென்று அடைவோர் களைகண் போற்றி
நினைவை அறியும் நின்மல போற்றி
அனைத்தும் காணும் அறிவா போற்றி
கற்றோர் பரவும் காரண போற்றி

நற்றவர் நோக்கும் நாரண போற்றி
அடியவர்க் கடியன் ஆனாய் போற்றி
செடியன தீவினை தீர்ப்பாய் போற்றி
கேடொன் றில்லாக் கேசவா போற்றி
மாடுறு நாரண மாதவ போற்றி

மதுசூதனனே மாயா போற்றி
பதுமநாபனே பாவன போற்றி
வாசுதேவனே வாமன போற்றி
திரிவிக்கிரம தேவா போற்றி
அரிகோவிந்தா அச்சுதா போற்றி

தாமோதரனே சதுரா போற்றி
ஆமா றடியரை ஆள்வோய் போற்றி
இருடி கேசா இறவா போற்றி
இருள் தீர் ஞான ஈசா போற்றி
தண்ணருட் சீரி தரனே போற்றி

எண்ணம் புகுந்தே இனிப்போய் போற்றி
எங்கும் இலகும் விண்டுவே போற்றி
பொங்கும் கீர்த்தி பூரண போற்றி
சிந்தனை செய்பவர் செல்வா போற்றி
பந்தம தறுக்கும் பரமா போற்றி

முந்தை வினையை முடிப்போய் போற்றி
அந்தமில் இன்பம் அருள்வோய் போற்றி
செந்தமிழ் மூன்றாய் திகழ்வோய் போற்றி
தந்தமிழ் பரப்பின் நடப்போய் போற்றி
செம்மை சேர்திரு வரங்கா போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைபடி வேங்கட மலையோய் போற்றி
கச்சியம் பதிவாழ் கன்னலே போற்றி
அர்ச்சையா எங்கும் அமர்ந்தாய் போற்றி
திருவலிக் கேணியில் திகழ்வாய் போற்றி
துருவனுக் கருளைச் சொரிந்தாய் போற்றி 100

தூயுடல் கொண்டு தோன்றினோய் போற்றி
தோயும் கன்மம் துன்னாய் போற்றி
தண்ணருள் சுரக்கும் தாயே போற்றி
பெண் ஆண் உருவாய்ப் பிறங்குவோய் போற்றி
நல்லன உலகிடை நல்குக போற்றி 105

தாமரைத் திருவடி தந்தன போற்றி
மாமகள் கொழுந நின் மலர்த்தாள் போற்றி
அடியார்க்கு நல்லன அருள்வாய் போற்றியே!! 108

ஸ்ரீமன் நாராயணப் பெருமாள் திருவடி போற்றி!!

திருமால் தோத்திரம்

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே.

!!ஓம் நமோ நாராயணாய !!

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

கூட்டுப் பிரார்த்தனை

விநாயகர் நாமாவளி

கணேச சரணம் சரணம் கணேசா
அரனார் மகனே சரணம் கணேசா
ஆதரித்தருள்வாய் சரணம் கணேசா
சிவனார் மகனே சரணம் கணேசா
சேய் எனைக் காப்பாய் சரணம் கணேசா
பார்வதி பாலா சரணம் கணேசா
பக்த ரட்சகனே சரணம் கணேசா
உமையாள் பாலா சரணம் கணேசா
உயர்வினைத் தருவாய் சரணம் கணேசா
மூஷிக வாகன சரணம் கணேசா
மோதக ஹஸ்தா சரணம் கணேசா
சாமர கர்ணா சரணம் கணேசா
விளம்பித சூத்ர சரணம் கணேசா
வாமன ரூபா சரணம் கணேசா
மகேஸ்வர புத்ர சரணம் கணேசா
விக்ன விநாயக சரணம் கணேசா
பாத நமஸ்தே சரணம் கணேசா

ஜயகணேச ஜயகணேச ஜயகணேச பாஹிமாம்
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ரட்சமாம்
ஜயகணேச பாஹிமாம் ஸ்ரீகணேச ரட்சமாம்
ஸ்ரீகணேச பாஹிமாம் ஜயகணேச ரட்சமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன் நாமாவளி

ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
ஓம் நமசிவாய சிவாய நம ஓம்
சிவசிவ சிவசிவ சிவாய நம ஓம்
அரஹர சிவசிவ சிவாய நம ஓம்
சிவாயநம ஓம் ஹராய நம ஓம்
ஜய ஜய சங்கர சிவாய நம ஓம்
ஹரஹர சங்கர சிவாய நம ஓம்
சம்போ சங்கர சிவாய நம ஓம்
சாம்ப சதாசிவ சிவாய நம ஓம்
சந்ரசேகரா சிவாய நம ஓம்
சங்கரி நாதா சிவாய நம ஓம்
அருணாசலனே சிவாய நம ஓம்
அண்ணாமலையாய் சிவாய நம ஓம்
அம்பலநாதா சிவாய நம ஓம்
ஆடிய பாதா சிவாய நம ஓம்
திருக்கேதீசா சிவாய நம ஓம்
திருக்கோணேசா சிவாய நம ஓம்
விஸ்வநாதனே சிவாய நம ஓம்
வேதநாதனே சிவாய நம ஓம்
ஏகாம்பரேசா சிவாய நம ஓம்
ஏகநாயகா சிவாய நம ஓம்
நமப்பார்வதி பதயே சிவாய நம ஓம்
அரஹர மஹாதேவ சிவாய நம ஓம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி நாமாவளி

ஓம் சிவசக்தி தாயே - உயர் ஓங்கார ரூபிணி தாயே
காஞ்சி காமாட்சி தாயே - உன் கழலடி பணிந்தோம் தாயே

காசி விசாலாட்சி தாயே - தினம் கருணைசெய்வாயே தாயே
மதுரை மீனாட்சி தாயே - உன் மலரடி பணிந்தோம் தாயே

ஆதி பராசக்தி தாயே - தினம் ஆண்டருள்வாயே தாயே
ராஜராஜேஸ்வரி தாயே - தினம் ரட்சித்தருள்வாய் தாயே

மாயி மகமாயி தாயே - உனை மறவா வரம் தருவாயே
கேதார கௌரி தாயே - எங்கள் கேடினை நீக்கிடு வாயே

உண்ணாமுலை அம்பிகையே - உன்னை வணங்கிடுவோம்
தினம் தாயே (ஓம் சிவசக்தி)

முருகன் நாமாவளி

வா வா வா வா முருகையா வடிவேல் அழகா முருகையா
வா வா வா வா முருகையா வடிவேல் அழகா முருகையா
அண்ணாமலையாய் முருகையா அநுதினம் போற்ற அருளையா
ஆவினன் குடிவாழ் முருகையா ஆறுதல் தருவாய் முருகையா

கந்த கோட்டத்துக் கந்தையா களிப்புடன் வாழ அருளையா
கதிர்கா மத்துறை கந்தையா கழலடி வாழ்த்த அருளையா
திருத்தணி வளரும் முருகையா தினமும் வாழ அருளையா
திருச்செந்தூர் வேல் முருகையா திருவருள் புரிவாய் முருகையா

சரவண பவனே சண்முகனே சரணடைந்தோம் வள்ளி நாயகனே
சரவண பவனே சண்முகனே சரணடைந்தோம் வள்ளி நாயகனே
சரணம் சரணம் கந்தையா சண்முக பதயே கந்தையா
நல்லூர் வளரும் கந்தையா - நாங்கள்
நலமுடன் வாழ அருளையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஹாரத்தி

ஓம் ஜெய ஜெய சக்தி - ஓம் ஸ்ரீஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம் பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியை தா.

ஓம் ஸ்ரீ ஜெய

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய (மறைய)
பக்தி பெருகிட பாடி உருகிட பணிப்பாய் அன்பிலெம்மை

ஓம் ஸ்ரீஜெய

இரண்டுகள் போக மூன்றுகள் அகல ஈசுவரி
வரமருள்வாய் அம்மம்மா ஈசுவரி வரமருள்வாய்
கரங்குவித்தோம் இனி காலை விடோமடி கருணையுடன் அணைப்பாய்

ஓம் ஸ்ரீ ஜெய

காசினியெங்கும் வேற்றுமை போக கருத்தினில்
அன்பருள்வாய் அம்மம்மா கருத்தினில் அன்பருள்வாய்
தேசுடன் வாழ காட்டடி காசி தேவியுன் அடைக்கலமே

ஓம் ஸ்ரீ ஜெய

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான - நல்லொளி
தீபம் வைத்து, ஞான நல்லொளி தீபம் வைத்து,
நமஸ்காரம் செய்து, ஹாரத்தி செய்தோம்
ஞான (ல)த்தில் அமைதியைத்தா.

ஓம் ஸ்ரீ ஜெய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ மஹாலஷ்மி தேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வெங்கடேஸ்வரர்

ஆசிரியரின் மற்றைய தொகுப்புக்கள்:

பஞ்சபுராணத் தொகுப்பு	02 . 2002
பன்னிரு திருமுறைத் தொகுப்பு	01 . 2006
பன்னிரு திருமுறைத் தொகுப்பு (2ம் பதிப்பு)	01 . 2010
திருமுருகன் பாமாலை தொகுப்பு	11 . 2012
பஞ்சபுராணத் திரட்டு	03 . 2015

தொடர்புகளுக்கு: 01322433658

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NET PRINTERS: 020 8265 0219